சார்பு நீதி மன்றம், மேட்டுப்பாளையம் , கோயமுத்தூர் மாவட்டம் .

முன்னிலை: திரு. பெ.க. சிவக்குமார்

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம் .

2022 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18 -ம் நாள் செவ்வாய்கிழமை

(திருவள்ளுவராண்டு ஸ்ரீ சுப கிருது வருடம் ஐப்பசி திங்கள் 01 ம் நாள்)

**அசல் வழக்கு. 39/2019**

**CNR.NO.TNCB.190000952019**

திரு. கங்காதரன் ...... மனுதாரர் / வாதி

**- இடையே -**

திரு. மோகன்குமார் ... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக 06.09.2022 ஆம் தேதியன்று இறுதிவிசாரணைக்கு வந்து, வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு. ஆர். சிவகுமார் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திருமதி.வி.சிந்துஜா அவர்கள் முன்னிலையாகியும், சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இருதரப்பு வாதங்களை கேட்டும் இறுதியாக இன்று இந்நீதி மன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

பிரதிவாதிக்கெதிராக ரூ. 6,12,800/- ஐ கடன் தொகையை வசூலிக்க வேண்டி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. வழக்குரையின் சுருக்கம்:-

வாதியிடம் கடந்த 20.03.2016 ம் தேதியில் பிரதிவாதி அவசர தேவைக்காக ஆண்டொன்றுக்கு 18 % வட்டி தருவதாக ஒப்புக்கொண்டு ரூ. 4,00,000/- ஐ கடன் ஒப்பந்த பத்திரம் எழுதி தந்து கடனாக பெற்றார். தொகையை பிரதிவாதியிடம் பல

முறை வாய்மொழியாக கேட்டும் அவர் தர மறுத்துவிட்டார். ஆகவே தொகையை பிரதிவாதி திரும்ப தர உத்தரவிடவேண்டும்.

**<u>02. பதில் வழக்குரையின் சுருக்கம் -</u>**

வாதி உரைப்பது போல் பிரதிவாதி வாதியிடமிருந்து ரூ. 4,00,000/-ஐ ஆண்டொன்றுக்கு 18% வட்டி தருவதாக ஒப்புக்கொண்டு கடன் பத்திரம் எழுதி தந்து கடன் பெற்றதாக உரைத்துள்ள கூற்று உண்மைக்கு மாறானது. பிரதிவாதியின் கையெழுத்தை மோசடியாக போட்டு கடன் பத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆகவே வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது.

**03. வாதியின் வழக்குரை, பிரதிவாதியின் பதிலுரை மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன;**

1. பிரதிவாதியால் நீதிமன்ற முத்திரைத்தாள் அல்லாத முத்திரைதாளில் எழுதிதரப்பட்டுள்ள கடன் ஒப்பந்த பத்திரம் உண்மையானதா ? பிரதிவாதியை கட்டுப்படுத்ததக்கதா?
2. வாதி கோரிய கடன் தொகையை வசூலித்து பெற வாதிக்கு உரிமையுள்ளதா?
3. இன்ன பிற பரிகாரங்கள் என்ன?

04. **சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :

வாதி தரப்பில் வாதி விசாரிக்கப்பட்டு ஒரு சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது . பிரதிவாதிகள் தரப்பில் பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவோ , சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவோ இல்லை.

05. **<u>வாதி கோரிய கடன் தொகையை வசூலித்து பெற வாதிக்கு உரிமையுள்ளதா?</u>**

**i)** வாதி தனது வழக்குரையை அடியொற்றி, சாட்சியத்தை முன் வைத்துள்ளதோடு வாதி தரப்பில் கடன் ஒப்பந்த பத்திரம் வா.சா.ஆ. 1 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட கடன் ஒப்பந்த பத்திரம் பிரதிவாதியால் ஏற்படுத்தி தரப்படவில்லையென வெறுமனே பதில் வழக்குரையின் மூலமாக மறுத்துரைக்கப்பட்டுள்ளதே தவிர , மேற்கண்ட பொருண்மையை நிரூபிக்கவோ , வாதியை குறுக்கு விசாரணை செய்யவோ பிரதிவாதி தரப்பில் எள்ளளவு முயற்சியும் மேற்கொள்ளவில்லை. இவ்வாறான நிலையில் வாதி உரைத்துள்ளது போல் ரூ. 4,00,000/- ஐ கடன் பெற்றுக்கொண்டு பிரதிவாதி கடனை திரும்ப செலுத்தவில்லையென்றே முடிவிற்கு வர இயலும். ஆகவே வாதி கோரியவாறு தொகையை தர பிரதிவாதிக்கு ஆணையிடலாமென இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

06. **<u>பிரதிவாதியால் நீதிமன்ற முத்திரைத்தாள் அல்லாதமுத்திரைதாளில் எழுதிதரப்பட்டுள்ள கடன் ஒப்பந்த பத்திரம் உண்மையானதா ? பிரதிவாதியை கட்டுப்படுத்தக்கதா?</u>**

கடன் ஒப்பந்த பத்திரம் பிரதிவாதியால் ஏற்படுத்தி தரப்படவில்லையென வெறுமனே பதில் வழக்குரையின் மூலமாக மறுத்துரைக்கப்பட்டுள்ளதே தவிர , மேற்கண்ட பொருண்மையை நிரூபிக்கவோ , வாதியை குறுக்கு விசாரணை செய்யவோ பிரதிவாதி தரப்பில் எள்ளளவு முயற்சியும் மேற்கொள்ளாததால் , மேற்கண்ட கடன் ஒப்பந்த பத்திரம் உண்மையான ஒன்றேயெனவும் , அது பிரதிவாதியை கட்டுப்படுத்தும் என்றும் இவ்வழக்கெழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**<u>07. இன்ன பிற பரிகாரங்கள் என்ன?</u>**

வழக்கின் தரப்பினருக்கு கிடைக்கக்கூடிய பரிகாரங்கள் குறித்து தெளிவாக தீர்வு காணப்பட்டுள்ளதால் வேறு எந்த பரிகாரங்களும் வழக்கின் தரப்பினருக்கு கிடைக்கத்தக்கதல்லவென்றும் , வழக்கின் செலவுத் தொகையை வாதிக்கு பிரதிவாதி அளிக்க வேண்டுமென்றும் இவ்வழக்கெழுவினாவிற்கு தீர்வு காண்கிறது.

**08. இறுதியாக**,

1. வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து ரூ. 6,12,800/- க்கு ஆண்டொன்றுக்கு 9% வட்டியுடனும் , தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆண்டொன்று 6% வட்டியுடனும் , மேற்கண்ட தொகையை 2 மாத காலத்திற்குள் வாதிக்கு , பிரதிவாதிக்கு அளிக்க வேண்டுமென ஆணையிடப்படுகிறது.

2. வழக்கின் செலவுத் தொகையை வாதிக்கு பிரதிவாதி வழங்க வேண்டுமென ஆணையிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு கணிணியில் நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரி பார்க்கப்பட்டு , 2022-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18 ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

P K SIVAKUMAR

Digitally signed by P K SIVAKUMAR
Date: 2022.10.19 18:16:37 +0530

சார்பு நீதிபதி,

மேட்டுப்பாளையம்.

பின் இணைப்பு

வாதி தரப்பு சான்றாவணங்கள்

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 20.03.2016 | கடன் ஒப்பந்த பத்திரம் | சான்றிட்ட நகல் |

## பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்

--- இல்லை ---

## இரு தரப்பிலும் சாட்சிகள் பட்டியல்

| வாதி தரப்பில் | | பிரதிவாதி தரப்பில் |
|---|---|---|
| வா.சா.1. | திரு. கங்காதரன் | ---- இல்லை --- |

P K SIVAKUMAR

Digitally signed by P K SIVAKUMAR
Date: 2022.10.19 18:16:43 +0530

சார்பு நீதிபதி,

மேட்டுப்பாளையம்.